# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்பு கல்விமாணித் தேர்வு

## 2011/2012 (2017 – December)

## EDS - 4243 கல்வியின் சமகால எழுவினாக்களும் கொள்கைகளும்

## (Contemporary Issues and Policies in Education)

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக

---

1. "கல்வியும் பொருளாதார அபிவிருத்தியும் ஒன்றிலொன்று தங்கியுள்ள இரண்டு பிரதான அம்சங்களாகும்"

   i. "அபிவிருத்தி" என்ற எண்ணக்கருவுக்கு நவீன கருத்தியல் அடிப்படையில் விளக்கம் தருக. (05 புள்ளிகள்)

   ii. கல்விக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் இடையிலான தொடர்பைப் பொருத்தமான நான்கு (04) உதாரணங்கள் மூலம் விளக்குக. (08 புள்ளிகள்)

   iii. இலங்கையில் கல்வி மூலம் பொருளாதார அபிவிருத்தியை அடைவதில் காணப்படும் நடைமுறைச் சவால்கள் ஆறினை (06) உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக. (12 புள்ளிகள்)

2. "கல்வியின் விசையைத் துரிதப்படுத்துவதில் உலக மயமாக்கலின் பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது."

   i. உலகமயமாக்கல் என்ற எண்ணக்கருவை வரையறை செய்க. (05 புள்ளிகள்)

   ii. உலகமயமாக்கல் காரணமாகக் கல்வியில் ஏற்பட்டுள்ள விருத்திகளை நடைமுறைசார் ஆறு (06) உதாரணங்கள் மூலம் விளக்குக. (06 புள்ளிகள்)

   iii. தொழினுட்ப வளர்ச்சி சர்வதேச கல்வி வளர்ச்சியில் எவ்வாறு பங்களிப்புச் செய்துள்ளது என்பதைப் பொருத்தமான உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக. (14 புள்ளிகள்)

3. சமூகத்தின் ஒத்துழைப்புடன் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் ஓர்: ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் அணுகுமுறையாகும்.

   i. இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் 'பாடசாலை மேம்பாட்டுத் திட்டம்' (Programme for School Improvement) என்பதைத் தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

ii. பாடசாலைகளில் பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் எழுந்திருக்கின்ற நடைமுறைச் சவால்களை நான்கினை (04) உதாரணங்கள் மூலம் விபரிக்குக. (09 புள்ளிகள்)

iii. ஓர் ஆசிரியர் என்ற வகையில் பாடசாலை மேம்பாட்டுத் திட்ட சவால்களை இழிவளவாக்குவதற்கு நீங்கள் முன்வைக்கும் ஆறு (06) விடயங்களை உதாரணங்கள் மூலம் விபரிக்குக. (12புள்ளிகள்)

4. .

i. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் நடைமுறையில் உள்ள கல்விப் பிரச்சினைகள் ஆறினை (06) உதாரணங்கள் மூலம் விளக்குக. (12புள்ளிகள்)

ii. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கல்வியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை பொருத்தமான நடைமுறை உதாரணங்கள் மூலம் தெளிவாக்குக. (13 புள்ளிகள்)

5. .

i. இலங்கையின் கல்வி முறையில் சமகல்வி வாய்ப்பை வழங்குவதில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் ஆறினைச் (06) சுருக்கமாக விளக்குக. (6x2=12புள்ளிகள்)

ii. சமகல்வி வாய்ப்பை அடைவதில் இலங்கை எதிர்நோக்கும் நடைமுறைச் சவால்களைப் பொருத்தமான உதாரணங்கள் மூலம் விளக்குக. (13 புள்ளிகள்)

6. பின்வரும் விடயங்களுக்குச் சிறுகுறிப்பெழுதுக.

i. கல்வியில் பண்புத்தரம்

ii. தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2016 அறிக்கையில் குறிப்பிடப்படும் ஆசிரியர் கல்வி தொடர்பான எழுவினாக்கள்

iii. இலங்கையில் கல்வி முறையில் மொழி தொடர்பான பிரச்சினைகள்

iv. இலங்கைக் கல்வி முறையும் நிர்வாகப் பன்முகவாக்கமும்

v. பாடசாலைகளின் வெளிவாரி மதிப்பீடு (5x5=25புள்ளிகள்)